# அமீரின் தந்தையுடன் பாரத பிரதமரின் சந்திப்பு

பிப்ரவரி 15, 2024

1. பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று பிற்பகல் தோஹாவில் அமீரின் தந்தை மேதகு. ஹமத் பின் கலீபா அல் தானி அவர்களை சந்தித்தார்.

2. கடந்த பத்தாண்டுகளாக கத்தாரின் வளர்ச்சிக்கு வழிவகுத்த அவரது தொலைநோக்குடன் கூடிய, தலைமைக்குப் பண்புமிக்க கத்தார் அமீரின் தந்தைக்கு பிரதமர் மோடி அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார். பின்னர் இந்தியா-கத்தார் இடையேயான உறவுகள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

3. பிராந்திய மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்து அமீரின் தந்தை அவர்களின் உள்ளார்ந்த கருத்துக்களுக்கு பிரதமர் மோடி அவர்கள் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

4. இந்தியாவும் கத்தாரும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பின் அசைக்க முடியாத பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன என்பதை அமீரின் தந்தை உறுதிப்படுத்தினார். மேலும் கத்தாரின் வளர்ச்சி மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பை வளர்ப்பதில் இந்திய சமூகத்தினரின் பங்களிப்பையும் அவர் பாராட்டினார்.

**தோஹா**
**பிப்ரவரி 15, 2024**